[1975 நவம்பர் 7

Expert Sculptors.

* 84 Q.—Thiru V. R. PERIANNAN (on behalf of Thiru G. N. RAJU): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any scheme with the Government to give impetus and encouragement to the art of sculpture as the number of expert sculptore is dwindling;

(b) if so, the details of the same; and

(c) whether there is any scheme to defray monthly pension particularly to aged sculptors?

சிற்பக்கலை வல்லுநர்கள்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் (திரு. ஜி. என். ராஜு சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சிற்பக்கலை வல்லுநர்கள் எண்ணிக்கை குறைந்து வருவதால் அந்தத் தொழிலை ஊக்கப்படுத்துவதற்கும் உற்சாகப்படுத்துவதற்கும் அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

(உ) குறிப்பாக வயது முதிர்ந்த சிற்பிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் கொடுக்க, திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) அரசு எடுத்துக் கொண்டுள்ள பூம்புகார் கலைக்கூடம், வள்ளுவர் கோட்டம், தமிழ்த்தாய் கோயில், புதுடில்லி, தமிழ்நாடு விருந்தினர் விடுதிச் சிற்ப வேலை ஆகிய திட்டங்களில் சிற்பக்கலை வல்லுநர்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளது.

(உ) இல்லை.

Thiru G. VASANTHA PAI: Sir, will the Government consider the making of models of these historic places of ancient fame in smaller towns as is done in foreign countries?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, வெளிநாட்டுக்காரர்கள் விரும்புவார்களேயானால், அந்த வகையிலே செய்து தரலாம். அந்த முறையிலே நாம் அவர்களை ஈடுபடுத்தலாம்.

1975 நவம்பர் 7]

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: முதிர்ந்த சிற்பிகளுக்கு ஓய்வூதியம் கொடுக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பது கேள்வி. அதாவது, சிற்பிகள் வேலை செய்ய முடியாத காலத்தில், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப் படுமா என்பது வினா. அதுபற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவர்களுக்கென்று தனியாக ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் எதுவுமில்லை. பொதுவாக, கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் இருக்கிறது. அதில், இசைக் கலைஞர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள், நாட்டியக் கலைஞர்கள் ஆகியோர் அடங்குவார்கள். அதிலே எழுத்தாளர்களைக்கூட சேர்த்திருக்கிறோம். வேண்டுமானால் அந்தத் திட்டத்தின் மூலம் இவர்களும் பயனடையலாம். அதைப்பற்றித் தனியாக ஆராயலாம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கேள்வி களுக்கு என்று ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஒரு தகவலை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் தந்தார்கள். ஆசிரியர்களுக்குச் சலுகைகள் இல்லையென்று சொன்னேன். சலுகைகள் இருப்பதாக அவர்கள் குறிப்பைப் படித்தார்கள். இல்லையென்பதை மீண்டும் தெரிவித்து, அதைப் பற்றிக் கேட்க இடமில்லாமல் திடீரென்று நிறுத்தும்போது, அந்தத் தகவலைப் புரிந்துகொள்ள முடியாத நிலைமை இருக்கிறது . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரம் என்பது ஒரு மணி நேரமிருந்தாலும், அவ்வளவு நேரத்தையும் திரு. முத்துசாமி அவர் களுக்கே கொடுக்க முடியாது. நேற்றுகூட ஒரு மணி நேரம் நடந்திருக்கிறது. எல்லா நேரத்தையும் ஒருத்தருக்கே கொடுத்துக்கொண்டிருக்க முடியாது. எல்லோருக்கும் பரவலாகத் தர வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவரவர்களே, முத்துசாமிக்கே கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையில்லை . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வேறு யார் குறைபட்டுக்கொண் டாலும், திரு. முத்துசாமி அவர்கள் தனக்கு அதிக நேரம் கொடுக்கவில்லை யென்று குறைபட்டுக்கொள்வதில் நியாயமில்லை.